**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**

முன்னிலை – **திரு.P. கனிமொழி, B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆவணி மாதம் 27–ம் நாள்

**TNMY090016012019**

**அசல் வழக்கு எண். 193/2019**

1. அமுதா
2. ரவிச்சந்திரன் ..... வாதிகள்

//எதிர்//

**பூபாலன்** .... பிரதிவாதி

இவ்வழக்கு சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.46/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு, மாவட்ட நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களின் உத்தரவின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் O.S.193/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சரவணன், அவர்கள் ஆஜராகிய நிலையில், என்முன்பாக 12.09.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் தொடர்ந்து ஆஜரின்மையால் வழக்கு மற்றும் ஆவணங்களை அனுசரித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**தீர்ப்புரை**

வழக்கு"ஏ" ஷெட்டியூல் சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்வாதியோ, அவரது ஆட்களோ அல்லது முகர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க எதிர்வாதி மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி உத்தரவிட்டும், வழக்கு "பி" ஷெடியூல் சொத்து எதிர்வாதியை அப்புறப்படுத்தி வாதிகளுக்கு எதிர்வாதியிடமிருந்து வசமாக சுவாதீன மீட்பு பரிகாரம் வாதிக்கு வழங்கக்கோரி இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி ஆஜர். வாதி ஆஜர் இல்லை. வாதி தரப்பில் விசாரணைக்கு தயார் இல்லை. இவ்வழக்கானது Special Listல் போட்டப்பட்ட 2019ஆம் ஆண்டு வழக்கு. எனவே வாதியின் வருகையின்மையால் இந்த வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 12.09.2024 இந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

Sd/–.P.கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**

முன்னிலை – **திரு.P. கனிமொழி, B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆவணி மாதம் 27–ம் நாள்

**TNMY090016012019**

**அசல் வழக்கு எண். 193/2019**

1. தரங்கம்பாடி தாலுக்கா, சீர்காழி முன்சிபி, தரங்கம்பாடியைச் சேர்ந்த வெளிப்பாளையம், பிள்ளையார்கோவில் தெருவில் வசிக்கும் செல்வராஜ் மனைவி 56 வயதுள்ள அமுதா.
2. தரங்கம்பாடி தாலுக்கா, சீர்காழி முன்சிபி, தரங்கம்பாடியைச் சேர்ந்த வெளிப்பாளையம், பிள்ளையார்கோவில் தெருவில் வசிக்கும் லெட்சுமணன் குமாரர் 54 வயதுள்ள ரவிச்சந்திரன்.

... வாதிகள்

//எதிர்//

1. சீர்காழி முன்சிபி, தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி நம்பர் 176 ஆரியநாட்டுத் தெருவில் வசித்து வரும் கோவிந்தராஜ் குமாரர் 50 வயதுள்ள பூபாலன்.

... பிரதிவாதி

வழக்கு"ஏ" ஷெட்டியூல் சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்வாதியோ, அவரது ஆட்களோ அல்லது முகர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க எதிர்வாதி மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி உத்தரவிட்டும், வழக்கு "பி" ஷெடியூல் சொத்து எதிர்வாதியை அப்புறப்படுத்தி வாதிகளுக்கு எதிர்வாதியிடமிருந்து வசமாக சுவாதீன மீட்பு பரிகாரம் வாதிக்கு வழங்கக்கோரி இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | : | 23.02.2017, (மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி) |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் | : | 23.02.2017 ஆம் தேதி சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 46/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின்படி 04.11.2019 அன்று இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் O.S. 193/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |
| இவ்வழக்கின் வழக்குமூலம் | : | தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர், கடை வெளிப்பாளையம் கிராமத்தில் 11.02.2017ல் உற்பத்தி. |

இவ்வழக்கின் நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற கட்டணத்திற்காகவும் பொருமானம் ரூ.18,000/– என நிர்ணயித்து அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ. 631/– நீ.ம.க.ச பிரிவு 27(c) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.46/2017 என

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு, மாவட்ட நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களின் உத்தரவின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் O.S.193/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சரவணன், அவர்கள் ஆஜராகிய நிலையில், என்முன்பாக 12.09.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் தொடர்ந்து ஆஜரின்மையால் வழக்கு மற்றும் ஆவணங்களை அனுசரித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரப்படும்.

## தீர்ப்பாணை

வாதியின் ஆஜரின்மையால் இவ்வழக்கனாது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

## சொத்துவிபரம்

### "ஏ" ஷெடியூல்

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார் பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, சாத்தங்குடி வட்டம், கடை வெளிப்பாளையம் கிராமத்தில் நத்தம் புல எண் 297/20 பழைய புல எண் 297/29ல் தெருவுக்கு வடக்கு, கலியபெருமாள் இடத்திற்கு மேற்கு, குளத்துக்கு தெற்கு, தெருவிற்கு கிழக்கு இந்த நான்கெல்லைக்குட்பட்டதில் வடபுறம் கீழ்மேல் 56-1/4 அடிஇ தென்புறம் கீழ்மேல் 53 அடி, தென்வடல் 80 அடி உள்ள மனைக்கொல்லை அதன் கீழ் நிலம் வடபுறம், தென்புறம் வேலி மரந்தழை உள்படவும் அதிலுள்ள 2 வீடுகள் உள்பட.

### "பி" ஷெடியூல்

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார் பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, சாத்தங்குடி வட்டம், கடை வெளிப்பாளையம் கிராமத்தில் நத்தம் புல எண் 297/20 பழைய புல எண் 297/29ல் தெருவுக்கு வடக்கு, கலியபெருமாள் இடத்திற்கு மேற்கு, குளத்துக்கு தெற்கு, "ஏ" ஷெடியூல் சொத்துக்கு ("பி" ஷெடியூல் சொத்து நீங்கலாக) கிழக்கு இதற்குள்பட்டதில் கிழக்கு புறமாக கீழ்மேல் சுமார் 2 அடி, தென்வடல் 80 அடி கூடுதல் 160 சதுரடி.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2024 ம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் நாள் இடப்பட்டது.

Sd/-.P.கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.